செ. கு. எண்:187 நாள் :12.12.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 12.12.2015

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை மற்றும் தென்மேற்கு வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பெய்த கன மழையினால் 1.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், வீரபோகம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரங்கநாதன் என்பவரின் மகன் துரைபாபு என்கிற மணிகண்டன்; வேம்பனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் விக்னேஷ்; சோழிங்கநல்லூர் வட்டம், கீழ்க்கட்டளைப் பகுதியைச் சேர்ந்த திரு. அந்தோணி என்பவரின் மகன் அமலநாதன் பால்; ஆலந்தூர் வட்டம், ராதா நகரைச் சேர்ந்த திரு. கோபால்சாமி என்பவரின் மகன் தங்கவேலு; ஜமீன் பல்லாவரம் பகுதியைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மகள் கவிதா; ஆதம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. ஜானகிராமன் என்பவரின் மகன் குட்டி என்கிற திருநாவுக்கரசு; திருப்போரூர் வட்டம், அனுமந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வீரபத்திரன் என்பவரின் மனைவி கனகா; அமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. வேதாச்சலம் என்பவரின் மகன் கார்த்திகேயன்; செங்கல்பட்டு வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜானகிராமன் என்பவரின் மகன் சுப்பிரமணி;

2.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், சூணாம்பேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. எட்டியான் என்பவரின் மகன் ஏழுமலை; தழுதாளிகுப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் என்பவரின் மகன் சங்கர்; சோழிங்கநல்லூர் வட்டம், பள்ளிகரணை பகுதியைச் சேர்ந்த திரு. முனுசாமி என்பவரின் மகன் குணசேகரன்; கணேசன் என்பவரின் மகன் ரமேஷ்;. கொட்டிவாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. கோவிந்தசாமி என்பவரின் மகன் ராமதாஸ்; ஆலந்தூர் வட்டம், நந்தம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேஷ்; மற்றும் அவரது மனைவி கீதா; திருப்போரூர் வட்டம், மேலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ரத்தினம் என்பவரின் மகன் கருணாகரன்; காரணை கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பன் என்பவரின் மனைவி திருமதி அஞ்சலை;

3.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், பெரிய குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியகருப்பன் என்பவரின் மகன் மாணிக்கசாமி;

--ஆகியோர் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

2.12.2015 அன்று செய்யூர் வட்டம், முதலியார்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சீனிவாசன் என்பவரின் மகன் குப்புசாமி;

3.12.2015 அன்று பரசநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு பழனி என்பவரின் மனைவி தேவகி;

6.12.2015 அன்று பனையூர் கிராமத்தைச் சேர்ந்த குப்பன் என்பவரின் மகன் கதிர்வேல்;

-- ஆகியோர் வீட்டின் சுவர் இடிந்து விழுந்ததில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

5.12.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் வட்டம், கொளத்தூர் மாளச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. பொன்னன் என்பவரின் மகன் நாராயணசாமி மழையின் காரணமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழ்நாட்டில் பெய்த கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **23** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**